## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி

---

### பெரிய திருமொழி தனியன்கள்

### திருக்கோட்டியூர் நம்பி அருளிச் செய்தது

கலயாமி கலித்₄வம்ஸம் கவிம் லோகதி₃வாகரம் |
யஸ்ய கோ₃பி₄: ப்ரகாஶாபி₄ராவித்₃யம் நிஹதம் தம: ||

### எம்பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் * - வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

### ஆழ்வான் அருளிச் செய்தது

நெஞ்சுக்கிருள் கடி தீபம் * அடங்கா நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம் * தமிழ நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரண சாரம் * பர சமயப்
பஞ்சுக்கு அனலின் பொறி * பரகாலன் பனுவல்களே

### எம்பார் அருளிச் செய்தது

எங்கள் கதியே! இராமானுச முனியே! *
சங்கைக் கெடுத்தாண்ட தவராசா! * - பொங்கு புகழ்
மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும் *
தங்கு மனம் நீ எனக்குத் தா

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## முதல் பத்து

### முதல் திருமொழி - வாடினேன்
### பெரிய திருமந்திரத்தின் பெருமை

** வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் *
        பெருந்துயர் இடும்பையில் பிறந்து *
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு *
        அவர் தரும் கலவியே கருதி **
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் *
        உணர்வெனும் பெரும் பதம் திரிந்து *
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் *
        நாராயணா என்னும் நாமம் 1

** ஆவியே! அமுதே! என நினைந்து உருகி *
அவர் அவர் பணைமுலை துணையா *
பாவியேன் உணராது எத்தனை பகலும் *
பழுது போய் ஒழிந்தன நாள்கள் **
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் *
சூழ்புனற் குடந்தையே தொழுது * என்
நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 2

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் *
தெரிவைமார் உருவமே மருவி *
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் *
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள் **
காமனார் தாதை நம்முடை அடிகள் *
தம் அடைந்தார் மனத்து இருப்பார் *
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 3

வென்றியே வேண்டி வீழ் பொருட்கு இரங்கி *
வேற்கணார் கலவியே கருதி *
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன் *
என் செய்கேன்? நெடு விசும்பு அணவும் **
பன்றியாய் அன்று பாரகம் கீண்ட *
பாழியான் ஆழியான் அருளே *
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 4

கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன் *
கண்டவா திரிதந்தேனேலும் *
தெள்ளியேன் ஆனேன் செல் கதிக்கமைந்தேன் *
சிக்கெனத் திருவருள் பெற்றேன் **
உள்ளெலாம் உருகிக் குரல் தழுத்து ஒழிந்தேன் *
உடம்பெலாம் கண்ண நீர் சோர *
நள்ளிருள் அளவும் பகலும் நான் அழைப்பன் *
நாராயணா என்னும் நாமம் 5

** எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் *
எனக்கரசு என்னுடை வாணாள் *
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி *
அவர் உயிர் செகுத்த எம் அண்ணல் **
வம்புலாம் சோலை மாமதிள் *
தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி *
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 6

இற்பிறப்பு அறியீர் இவர் அவர் என்னீர் *
இன்னதோர் தன்மை என்றுணரீர் *
கற்பகம் புலவர் களைகண் என்று உலகில் *
கண்டவா தொண்டரைப் பாடும் **
சொற்பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின் *
சூழ்புனற் குடந்தையே தொழுமின் *
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்ம்மின் *
நாராயணா என்னும் நாமம் 7

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும் *
கருத்துளே திருத்தினேன் மனத்தை *
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை *
பெருநிலத்து ஆருயிர்க்கு எல்லாம் **
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன் *
செல் கதிக்கு உய்யுமாறு எண்ணி *
நல்துணையாகப் பற்றினேன் அடியேன் *
நாராயணா என்னும் நாமம் 8

** குலம் தரும் செல்வம் தந்திடும் *
அடியார் படு துயர் ஆயின எல்லாம் *
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும் *
அருளொடு பெருநிலம் அளிக்கும் **
வலம் தரும் மற்றும் தந்திடும் *
பெற்ற தாயினும் ஆயின செய்யும் *
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 9

** மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர் *
மங்கையார் வாள் கலி கன்றி *
செஞ்சொலால் எடுத்த தெய்வ நல்மாலை *
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்! **
துஞ்சும் போது அழைமின் துயர் வரில் நினைமின் *
துயரிலீர் சொல்லிலும் நன்றாம் *
நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு *
நாராயணா என்னும் நாமம் 10

**அடிவரவு:** வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வனேன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு வாலி

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---